**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 489/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 11.02.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குப்பம்பட்டியில் குடியிருந்து தறி ஓட்டி வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். கடந்த 2025 ம் வருடம் மளிகை கடைக்கு சென்று கொண்டிருந்த போது சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு நான் வந்துவிட்டேன். சம்பவத்தை நான் பார்க்கவில்லை. அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 29.04.2025 ம் தேதி காலை 11 மணிக்கு சிவக்குமார் என்பவர் இரு சக்கர வாகனத்தில் தறி பாகு எடுத்துக் கொண்டு சென்றார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது ரத்தினவேல் என்பவர் சிவக்குமாரை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றால் இல்லை. பிறகு ஜெயவேல் கல்லை எடுத்து சிவக்குமார் இடது காது அருகில் குத்தினார் என்றால் எனக்கு தெரியாது. பிறகு

கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**<br>**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**<br>**மேட்டூர்.**